**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF, TENKASI.**

**O.S. 466/2015**

Deposition of witness for PW1

Name : திரு. முருகன்

Father's Name : திரு.

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **15.12.2020.**

**முதல்விசாரணை:**

நான் வாதியின் பவர் ஏஜெண்ட். நிருபண உறுதிக்கூற்று வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிருபண உறுதிக்கூற்று வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நிருபண உறுதிக்கூற்று வாக்குமூலம் என்னால் விவரங்கள் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்து தயார் செய்யப்பட்டுள்ளது. நிருபண உறுதிக்கூற்று வாக்குமூலத்தை முதல்விசாரணை சாட்சியமாக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

28.09.2015ல் வெள்ளைய நாடார் எனக்கு எழுதிக்கொடுத்த பவர் ஆவணத்தின் அசல் வா.சா.ஆ.1. (வெள்ளைய நாடார் தற்போது உயிருடன் உள்ளாரா? இல்லையா? என்ற பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் வா.சா.ஆ.1 குறியீடு செய்யப்படுகிறது). 18.10.1951ல் மாடசாமி கரையாளர் மற்றும் அனஞ்சி கரையாளர் ஆகியோர்கள் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின்

எஸ்.ஆர்.ஓ. நகல் வா.சா.ஆ.2. வழக்கு சொத்திற்கான அ பதிவேடு உண்மை நகல் வா.சா.ஆ.3. 07.03.1964ல் சுப்பிரமணிய நாடார் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் அசல் வா.சா.ஆ.4. 07.03.1964ல் சுப்பிரமணிய நாடார் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் எஸ்.ஆர்.ஓ. நகல் வா.சா.ஆ.5. (வா.சா.ஆ.4 கிரைய ஆவணம் கிழிந்த நிலையில் உள்ளதால் அந்த ஆவணத்தின் நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது) வழக்கு சொத்திற்கான செட்டில்மெண்ட் சிட்டா வா.சா.ஆ.6. 02.10.2015ல் வழக்கு சொத்துக்கு பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டா வா.சா.ஆ.7. பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க கு.வி. ஒத்தி வைக்கப்படுகிறது.